REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: கார்த்திகை 24உ வியாழன் (9—12—54) ★ ★ வெளியூர்: கார்த்திகை 25உ வெள்ளி (10—12—54) [இதழ் 153

லாமாக்கள் மாஸ்கோ செல்கின்றனர்

காலிம்போங், டிச. 8—

திபேத்தின் அரசியல், மதத் தலைவர்களான பஞ்சன் லாமாவையும், தலாய் லாமாவையும் சோவியத் சர்க்கார் தன் நாட்டிற்கு வருமாறு அழைத்திருக்கிறது என்று தெரிகிறது.

இப்போது தலாய் லாமா பீகிங்கில் இருக்கிறார். இவர்கள், வருகிற இளவேனிற்காலத்தில் மாஸ்கோ செல்வார்கள் என்று தெரிகிறது. தலாய் லாமா தனக்குக் கிடைத்திருக்கிற அழைப்பு பற்றியும், தான் அதற்கு ஒப்புக்கொண்டுள்ளது பற்றியும் லாசாவிலுள்ள திபேத் மந்திரி சபைக்கு செய்தி அனுப்பியிருக்கிறார் என்று தெரிகிறது.

'தொழில் வளர்ச்சியில் தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது'

'தென்னாட்டின் இயற்கை வளத்தைக்கொண்டு வட நாடு தொழில் வளத்தில் முன்னேறுகிறது'

சுதந்திரக் கேரளக் கோரிக்கை உரம் பெறுகிறது

வடவர் ஏகாதிபத்தியப் போக்கிற்கு கேரள சோஷலிஸ்டு கட்சி சாட்டை

"கேரளத்தின் மிக நெருக்கடியான பிரச்சினைகளாயுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தையும், பஞ்சத்தையும், பசியையும் போக்க, கேரளம் ஒரு தனி நாடாக ஆகவேண்டும்; அதற்காக கேரள மக்கள் பாடுபட முன்வர வேண்டும்."

"தென்னாட்டில்தான் வேலையில்லாத் திண்டாட்டம் மிகக் கடுமையாக இருக்கிறது. ஆனால், யூனியன் சர்க்கார் தென்னாட்டை அலட்சியப்படுத்தி வருகிறது."

"குடிவளமுள்ள தென்னாட்டு மக்களின் செல்வத்தைக் கொண்டு, யூனியன் சர்க்கார் வெகு வேகமாக வடநாட்டை தொழில் மயமாக்கி வருகின்றது."

"தென்னாட்டில் ஆயிரக்கணக்கான படித்த, அறிவு நுணுக்கம் மிகுந்த இளைஞர்கள் வேலையின்றி பட்டினியால் தவிக்கையில், யூனியன் அரசாங்கம், அநேகமாக எல்லா தொழில்களையும் வடநாட்டிலேயே நிறுவி வருகின்றது,"

—என்று, கேரள சோஷலிஸ்டு கட்சித் தலைவரான தோழர் மந்தாய் மஞ்சூரன், கேரள சோஷலிஸ்டு கட்சியின் மாவட்ட மாநாடு ஒன்றைத் துவக்கி வைத்துப் பேசுகையில், வடநாட்டு ஏகாதிபத்தியத்தைச் சாடியிருக்கிறார்.

"சுதந்திரமான கேரள நாடு காண்பதின் மூலம்தான், கேரளத்தைப் பீடித்திருக்கும், வேலையின்மையையும், பஞ்சத்தையும் போக்க முடியும்; கேரளத்தில், தொழில் வளமாக, கேரளத்திற்கு சுதந்திரமான சர்க்கார் ஒன்று வேண்டும்; அத்தகைய சர்க்காரை அமைத்து கேரளத்திற்கு விடுதலை பெற, கேரள சோஷலிஸ்டுக் கட்சியுடன் எல்லா இடதுசாரி கட்சிகளும் இணைந்து வேலை செய்ய வாரீர்,"

என அழைக்கும் தீர்மானம் ஒன்றும் அந்த மாநாட்டில் நிறைவேறியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

கல்கத்தா துறைமுகத் தொழிலாளர் தகராறு

நிர்வாகிகளுடன் உடன்பாடு

கல்கத்தா துறைமுக அதிகாரிகளுக்கும், 30,000 துறைமுகத் தொழிலாளர்களுக்குமிடையே கடந்த 26 நாட்களாக நீடித்து வந்த தகராறில் இன்றிரவு உடன்பாடு ஏற்பட்டதாகத் தெரிகிறது. வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்புகின்றனர்.

தொழிலாளர்களின் பிரச்சினைகள் சமரசமாக தீர்க்கப்பட்டதாம். இந்த வேலை நிறுத்தத்தினால் துறைமுகத்தில் சாமான்கள் ஏற்றுமதி செய்யவும், இறக்குமதி செய்யவும் இயலாது போயிற்று.

தொழிலாளர்களுக்கு இருந்த குறைகளில் ஒன்று, அவர்கள், சாமான்களைத் தலைமீது தூக்கிச் செல்ல வேண்டியிருந்ததாகும்.

தொழிலாளர் இன்ஷ்யூரன்ஸ் திட்டம்

சென்னை, டிச. 9—

தொழிலாளர்களுக்கான அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் திட்டம், புது வருடத்தில் குடியரசு தினத்தன்று, சென்னை, மத்திய பாரத், மேற்கு வங்கம் ஆகிய மூன்று மாநிலங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

இந்த திட்டம் ஏற்கனவே பம்பாய், டில்லி, மத்திய பிரதேசம், கிழக்கு பஞ்சாப், உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் அமுலுக்கு வந்துவிட்டதென்பது நினைவிலிருக்கலாம்.

சென்னை மாநிலத்தில் இத்திட்டம் கோவை நகரில் முதலில் ஆரம்பிக்கப்படுமாம்.

அமெரிக்காவுக்கு சூ-என்-லாய் எச்சரிக்கை!

துருப்புக்களை திருப்பி அழைக்கவும்; இல்லையேல் விளைவுகளை அனுபவிக்கவும்!

பார்மோசாவிலிருந்தும், தேசியச் சீனா வசமுள்ள தீவுகளிலிருந்தும், தனது துருப்புகளை வாபஸ் பெறாவிட்டால், அதனால் ஏற்படும் விளைவுகளை ஏற்றுக்கொள்ள அமெரிக்கா தயாராக இருக்க வேண்டுமென்று சூ-என்-லாய் எச்சரித்துள்ளார்.

"தற்போது ஏற்பட்டுள்ள அமெரிக்க - தேசியச் சீன பாதுகாப்பு ஒப்பந்தம் சீன சர்க்காரைப் போருக்கு அழைக்கிறது," என்று சூ-என்-லாய் குறிப்பிட்டுவிட்டு, சீன மக்கள் குடியரசின் சார்பில் நான் கூறுகிறேன்—"பார்மோசா, கம்யூனிஸ்டு சீனாவின் பிரதேசமாகும்; சியாங்-கே-ஷேக் மக்களின் எதிரியாவார்," என்று குறிப்பிட்டார்.

"இந்த ஒப்பந்தத்தின் மூலம் பார்மோசாவை சட்ட விரோதமாக தான் வசப்படுத்தியிருக்கும் அநியாயத்திற்கு, சட்ட மூலாம் பூச அமெரிக்கா முயல்வதுடன், சீனா மீது புதியதோர் போரைத் தொடுக்க, பார்மோசாவை அமெரிக்கா ஒரு தளமாகப் பயன்படுத்த முயற்சிக்கிறது," என்று, சூ-என்-லாய் எச்சரித்திருக்கிறார்.

"பார்மோசாவை மீட்பதும், துரோகியான சியாங்-கே-ஷேக்கை விரட்டுவதும், கம்யூனிஸ்டு சீனாவின் உள்நாட்டு பிரச்சினையாகும்; இதில் வெளியாரின் தலையீட்டை பொறுத்துக்கொள்ள முடியாது," என்று அவர் மேலும் எச்சரித்தார்.

"போர் ஏற்படும் என்ற அச்சத்தினால், பார்மோசாவை மீட்க வேண்டுமென்ற முடிவை சீன மக்களிடமிருந்து அசைக்க முடியாது,"

என்று, அவர் மேலும் குறிப்பிட்டார்.

புதிய நாடகத் தடைச் சட்டத்திற்கு நடிகர் சங்கக் கண்டனம்

காமராசரிடம் முறையீடு

சட்டத்தை எதிர்ப்பதற்கான விளக்கம்

"புதிதாக இப்போது கொண்டுவர எண்ணியிருக்கும் நாடக நிகழ்ச்சிகள் சட்டம், வளர்ந்துவரும் நாடகக் கலைக்குப் பெரும் பாதகத்தை உண்டுபண்ணக்கூடியதாய் இருக்கிறது என்ற முறையில், நாங்கள், அந்தச் சட்டத்திற்கு எங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துக்கொள்கிறோம்,"

—என்று, 7—12—54-ல், தோழர்கள் டி. கே. சண்முகம், எம். ஜி. இராமச்சந்திரன், என். எஸ். நாராயண பிள்ளை, சிவாஜி கணேசன், எஸ். வி. சகஸ்ரநாமம் ஆகியோரைக் கொண்ட தூதுக்குழுவினர், தென்னிந்திய நடிகர் சங்க சார்பில், சென்னை முதலமைச்சர் காமராசரிடம் சென்று தந்துள்ள விண்ணப்பமொன்றில் குறிப்பிட்டுள்ளனர். அவ்விண்ணப்பத்தில் மேலும் காணப்படுவதாவது :—

"இந்தப் புதிய சட்டத்தை நாங்கள் எதிர்ப்பதற்குரிய காரணங்கள் கீழ்வருமாறு :—

(1) நாடகம் மக்கள் முன்னேற்றத்திற்கும், பொழுதுபோக்கிற்கும், அறிவு வளர்ச்சிக்கும், சமுதாய சீர்திருத்தத்திற்கும் பயன்பட வேண்டிய கலைச் சாதனம்; இதை சர்க்கார் கட்டுப்படுத்துவதும், தடை விதிப்பதும், கலை வளர்ச்சிக்கும் அதன் மூலம் ஏற்படும் அறிவு வளர்ச்சிக்கும் குந்தகம் விளைவிப்பதாகும்;

(2) நடத்தப்படும் நாடகங்களில், 'இன்னின்ன பகுதிகள், இத்தகைய செக்ஷன்படி குற்றம் உடையது,' என்று கூறி, நாடகம் நடத்துவோர்மீது வழக்குகள் தொடுக்க, சர்க்காருக்கு இப்போது இருக்கும் அதிகாரமே போதுமானதாகும் புத்தகங்கள், பத்திரிகைகள் இவைகள் சம்பந்தமாக சர்க்கார் கையாளும் முறைகளே நாடகத்திற்கும் பொருந்தும்;

(3) பொது மக்களிடம் நாடகம் காட்டப்படா முன்பே, அதிகாரிகள், தாமாக, இன்னின்ன குற்றங்கள் நாடகத்தில் உள்ளன என்று எண்ணித் தடை விதிப்பது நாடகக் கலைக்கு அழிவு தேடுவதாகும்;

(4) சர்க்காரால் நியமிக்கப்பட்ட சிறு அதிகாரிகளின் சொந்த விருப்பு—வெறுப்புகளின்படி தடைச் சட்டம் பயன்பட்டு, இறுதியில் நாடகக் கலையே நாசமாகும்;

(5) நாடகக் கலைக்கு, இந்தியா பூராவிலுமுள்ள எந்த மாநிலத்திலும் இத்தகைய ஆபத்தான சட்டம் இல்லை;

(6) சர்க்காரின் சாதாரண அதிகாரமே, நாசக்கருத்துள்ள நாடகங்களை நடத்துவோர்மீது செலுத்தப் போதுமானது;

(7) ஏற்கனவே நாடகக் கலை, சினிமாப் போட்டி, தியேட்டர் இல்லாமை, வசதிக் குறைவு ஆகியவற்றால் நசித்து வருகிறது; இந்தச் சூழ்நிலையில், நாடகத் தடைச் சட்டமும் வந்தால், நாடகக் கலை அடியோடு அழிந்துவிடும் என்று அஞ்சுகிறோம்;

(8) ஏழை எளிய மக்களுக்கும், கிராமவாசிகளுக்கும், இன்பமும் அறிவும் கிடைக்கும் ஒரே சாதனமாயுள்ள நாடகக் கலை மீது இவ்விதம் ஒரு ஆபத்தைச் சுமத்துவது சரியில்லை;

(9) தமாஷா வரிச் சலுகையினால், நாடகக் கலைக்கு ஏற்பட்டு வரும் நன்மையை, புதிய சட்டம் கெடுத்துவிடும்.

ஆகவே இந்த நாடகத் தடைச் சட்டத்தை சர்க்கார் கருணைகூர்ந்து கைவிடுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்."

பாங்கி ஊழியர் வேலை நிறுத்தம் ஒத்தி வைக்கப்பட்டது

புதுடில்லி, டிச. 8—

"இந்திய உபகண்டம் முழுமையும் டிச. 10-ம் நாள் ஆரம்பமாக இருந்த பாங்கி ஊழியர்களின் வேலை நிறுத்தம் ஒத்தி வைக்கப்பட்டது,"

என்று அகில-இந்திய பாங்கி ஊழியர்கள் சங்க நிர்வாகக் குழு அறிவித்தது.

வேலை நிறுத்தம் பற்றிய பிரச்சினையை இறுதியாகத் தீர்மானம் செய்ய அகில இந்திய பாங்கி ஊழியர் சங்க தனி மாநாடு ஒன்று கூட்டப்படும் என்று தெரிகிறது.

அடுத்த ஆறு வாரங்களுக்குள் இந்த மாநாடு கூட்டப்படும்.

கீழ்கண்ட ஐந்து கோரிக்கைகளுக்காக வேலை நிறுத்தம் நடைபெறுவதாக இருந்தது :—

1. தொழில் அப்பீல் மன்றத் தீர்ப்பை மாற்றி சர்க்கார் பிறப்பித்த உத்திரவை வாபஸ் பெற வேண்டும்.

2. தற்போது கிடைத்துவரும் வருமானத்திற்குக் குறைவில்லாமல் தீர்ப்பை அமுல் நடத்தவேண்டும்.

3. ஆட்குறைப்போ அல்லது சலுகைகள் குறைப்போ கூடாது.

4. பாங்கி ஊழியர்கள் கழகத்தையும், அதன் கிளைகளையும் அங்கீகரிக்க வேண்டும்.

5. யூனைடெட் பாங்க் ஆப் இந்தியா அல்லது வேறு எந்த பாங்கியையும் தீர்ப்பின் அமுல் பிரதேசத்திலிருந்து விலக்குவதுகூடாது.

பாங்கி ஊழியர்களின் கோரிக்கைப்படி, பாங்கி அப்பீல் மன்றத்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 9—12—1954 வியாழன்

ஏவல்படி ஆடும் பாவைகள்!

★

'கலை கலைக்காகவே' என்றபோட்டி குறைந்து காணப்படும் புராண நாடகத் துறையையே உடும்புப் பிடியாகப் பற்றிக்கொண்டு இருந்தால், தம் ஆயுட்காலம் உள்ள வரை சுகமாக வாழ்க்கையைக் கழித்துவிடலாம் என, அத்திருக்குணாளர்களுக்குள்ள அசைக்க முடியாத நம்பிக்கையும், பேராசையுந்தான் காரணங்களாகும். முருகன் திரு அவதாரப் பெருமையையும், சபரிமலை அய்யப்பன் அற்புதத்தையும் பொதுமக்கள் கண்டு களிக்க, விஞ்ஞானம் தந்த மின்னொளி தயவல்லவா தேவைப்படுகிறது என்பதை அவர்கள் ஒரு விநாடி சிந்தித்தாலும், அவர்களுக்கு வெட்கமும் துக்கமும் ஒரே காலத்தில் தோன்றிடும். அவர்கள்தான் சிந்திப்பதில்லையே; அப்பணியைத்தான் பக்தி மார்க்கம் பாபிகளின் செயலென, செல்லரித்த ஏடுகளைக் காட்டி உறுதி செய்திருக்கிறதே, அப் பாபச் செயலை அந்த உத்தமோ உத்தமர்களிடமா எதிர்பார்ப்பது?

கோட்பாட்டினைக் கூறிக்கொண்டு, நாடகக் கலையைப் புராணப் பிரச்சாரத்திற்காகவே, பல ஆண்டு காலமாக சிலர் பயன்படுத்தி வந்தனர். அதே போக்கில் நாடகக் கலையைப் பயன்படுத்திக்கொண்டு, இப்பொழுதும் இரண்டொரு 'சர்குண' சீலர்கள் இருக்கத்தான் இருக்கின்றனர். தேய்ந்த பாதையிலேயே அக்குணாளர்கள் சென்றுகொண்டு இருப்பதற்கு, மற்றவர்களுக்கு இல்லாத அளவிற்கு அவர்களிடத்தில் தனித்துள்ள 'பகவத் பக்தி'யோ, இதிகாச புராண நம்பிக்கையோ காரணமல்ல. கால வேகத்தின் காரணமாகக் கருத்துலகில் புயல் வீசத் தொடங்கியதும், அப்புயலை எதிர்த்து நின்று அழிவைத் தேடிக்கொள்வதைக்காட்டிலும், அத்துடன் ஒத்துச்சென்று காலக் கருத்தின் தூதுவர்களாகத் தம்மை மாற்றிக்கொண்டு, தலை நிமிர்ந்து வாழ வழி தேடிக்கொள்வதே பொருத்தமானது என, புராணப் பிரசாரத்தை விடுத்து, தேவைப்படும் புத்தறிவுப் பாதையில் நாடகக் கலையைச் செலுத்த முனைந்தனர், சிற்சிலர்.

இதுவுமன்றி, இந்தியத் துணைக்கண்டம் அரசியல் விடுதலை பெற்றுவிட்டதும், வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு எதிராக நாடகக் கலை மூலம் உரிமை முழக்கம் எழுப்ப வேண்டிய கட்டாயத்திற்கும், மற்றத் துறைகளுக்கு ஏற்பட்டது போன்றே முற்றுப்புள்ளி வைக்க வேண்டியதாகப் போய்விட்டது. அதனால், அரசியலில் ஏற்பட்ட மாற்றம், நாடகத் துறையிலும் எதிரொலிக்கத் தொடங்கியது. கால வேகத்தால் புராண மகிமையும், வெள்ளையராட்சி வெளியேறிவிட்டதால் விடுதலைகீதப் பெருமையும் வேகமாக மங்கி வரலாயின. தொழில் துறைகள் அனைத்திலும் ஈடுபடுகிறவர்களைப்போலவே, நாடகத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்களில், இயல்பாகவே சேவையுள்ளம் பெற்றிருந்தவர்கள் சிலர், நாடகக் கலையைப் பொதுமக்கள் நலங் கருதும் நற்சேவைக்குப் பயன்படுத்த முனைந்தனர். அது முதல் நாடகக் கலை காலக் கண்ணாடியாகக் காட்சியளிக்கத் தொடங்கியது.

நடிகக் குழாத்தினர் பெரும்பான்மையினர் தேய்ந்த பாதையிலிருந்து விலகி, சமூக நலப் பாதையில் முன்னேறிக் கொண்டே இருக்கும் இத்தருணத்திலும்கூட, இரண்டொரு 'ஆஷாடபூதிகள்' பாழடைந்த முன்னாள் பாதையிலேயே தனித்துச் சென்று கொண்டிருப்பதைக் காண்கிறோம். அறிவியல் துறையில் இதற்கு ஒரே ஒரு விளக்கம் தான் உண்டு. அதாவது, 'அருபொருளு'க்கு அதிக மதிப்பு இருக்கும்; எனவே,

நாடகக் கலையின் புதிய போக்கும் நோக்கும், ஆளவந்தார்களின் செயலில் காணப்படும் குறைவு நிறைவுகளை ஊடுருவத் துவங்கின. சமுதாயத்தில் மலிந்து கிடக்கும் மாசுகளைத் துடைக்கும் பணியில் நாடகக் கலை முனைந்தது. இப்போக்கு, சமுதாயத்திலுள்ள மாசுகளைத் தங்களுக்கு மகிமை தேடித் தரும் நல்வாய்ப்புகளாகக் கொண்டிருந்தவர்களிடை கலக்கத்தை மூட்டியது. வெள்ளமெனப் பெருகிவரும் கலக்கத்திற்கு அணை கோல, நாடகக் கலைக்குக் கட்டுப்பாடு விதிக்க வேண்டுமென கூக்குரல் கிளப்பியது அத்திருக்கூட்டம். மற்றவர்களுக்கு இல்லாத அளவு பிரசார பலமும், பெரிய இடத்து ஆதரவு பலமும் அத்திருக் கூட்டத்திற்கு இருந்துவரும் காரணத்தால், ஆட்சிபீடத்திலுள்ள ஆட்சியாளர்களும் அவர்கள் ஏவல்படி ஆடும் பாவைகளாக மாறியுள்ளனர்! ஆட்சியாளர்கள் கூட்டத்திலும், அரசியல் நடிகர்களும் ஒருவர் இருவர் இருக்கின்றனர். எனவே, புதிய நாடகக் கலையின் 'கழுத்தை அறுக்க' சட்டமென்ற பெயரில் ஒரு சட்டமில்லா சட்டத்தை இயற்ற, காங்கிரஸ் ஆட்சியாளர்கள் முனைந்துள்ளனர். புதிய சட்டத்தின் நன்மை தீமைகளை நாளை எழுதுவோம்.

தாராள அனுமதி

உள்நாட்டு உபயோகத்திற்காக உற்பத்தி செய்யப்பட்ட கையால் அச்சுக் குத்தப்பட்ட பருத்தி நூல் வேலைகளை 1955 ஜூன் முடிய அனுமதிக்கப்பட்டுள்ள எல்லா நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ய தாராளமாக லைசென்சு வழங்கப்படும் என்று கட்டுப்பாடு அலுவலக அறிக்கை ஒன்றின் மூலம் மதரிகிறது.

பி. சோ. மாநாட்டில் பட்டம் தாணு ஆட்சியை எவரும் ஆதரிக்கவில்லை!

ஜனாதிபதியின் நேரடி ஆட்சியே மேலானது

திரு. ரசாக் எம். பி. கருத்து!

★

"நாகபுரியில் கடந்த நவம்பர் இறுதியில் நடைபெற்ற பி. சோ. கட்சி மாநாட்டில், திரு—கொச்சியில் பட்டம் தாணு தலைமையில் இயங்கும் பி. சோ. கட்சி சர்க்காரை ஆதரித்து யாரும் பேசவில்லை;

"மத்திய சர்க்காரும், அவ்வப்போது திரு-கொச்சி சர்க்காரைக் கண்டித்திருக்கின்றனர். நாங்கள் அவ்வப்போது தாக்கல் செய்த புகார்கள் மீது தீவிரமான விசாரணை செய்திருக்கின்றனர். ராஜாங்க இலாக்கா மூலமாய் திரு-தமிழர் பிரச்சினைக்குப் பரிகாரம் காண முயன்றிருக்கின்றனர்;

"சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டும் முழுப் பொறுப்பும் மாநிலஅரசாங்கங்களைச்சார்ந்த விஷயமாகையால், திரு-தமிழகத்தில் நடைபெற்ற அடக்குமுறைகளை மத்திய சர்க்கார் நேரிடையாக தலையிட்டுக் கண்டிக்க முடியாததாகப் போய்விட்டது,"

—என்று, திரு-தமிழக காங்கிரஸ் மக்கள் சபை உறுப்பினரான திரு. ஏ. ஏ. ரசாக் நிருபரொருவரிடம் கூறியதாகத் தெரிகிறது.

"திரு-தமிழகத்தைப் பொறுத்த மட்டில், பட்டம் தாணுவின் ஆட்சியைவிட ஜனாதிபதியின் நேரிடையான ஆட்சியே மேலானது; திரு-கொச்சியில் நிலவும் கொடுங்கோன்மைக்குப் பரிகாரம் காண மந்திரி சபையை 'டிஸ்மிஸ்' செய்துவிட்டு, சட்டசபையையும் கலைத்து, ஜனாதிபதியின் ஆட்சியை நிறுவுவதானால் அதற்கு முதன் முதலில் காங்கிரஸ் கட்சியின் சம்மதம் வேண்டும். திரு-கொச்சி காங்கிரசின் நிலை அதல்ல; திரு-தமிழகக் காங்கிரஸ் ஜனாதிபதியின் ஆட்சியை ஆதரிக்கும்; ஏனெனில், மக்கள் சபைக்குப் பொறுப்புள்ள ஜனாதிபதி ஆட்சி, இப்போதிருக்கும் பட்டம் ஆட்சியைவிட, திரு-தமிழர்களைப் பொறுத்தவரையில் பாதகமாயிருக்க முடியாது," என்றும் திரு. ரசாக் கருத்தறிவித்திருக்கிறார்.

நாகபுரி பி.-சோ. மாநாட்டில் கலந்துகொண்ட அவர், "பி.-சோ. கட்சியின் தேசிய நிர்வாகக் குழுவின் தீர்மானத்தைத்தான் பெரும்பான்மையோர் ஆதரித்தார்களேயன்றி, பட்டம் தாணுவின் ஆட்சியை அங்கு யாருமே ஆதரித்துப் பேசவில்லை," என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆரம்பக் கல்வி விசாரணைக் குழு

ஆராய்ந்தறியும் பிரச்சினைகள்

சென்னை மாநிலத்தில் ஆரம்பக் கல்வி நிலை குறித்து ஆராய டாக்டர் ஆர். எம். அழகப்பச் செட்டியார் தலைமையில் ஒரு விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளதல்லவா? அந்த விசாரணைக் குழு ஆரம்பக் கல்வி சம்பந்தப்பட்ட பல விஷயங்கள் குறித்தும் ஆராய்ந்தறியும் என்று தெரிகிறது.

சென்னை மாநிலத்தில் இப்போது நடைமுறையிலிருக்கும் ஆரம்பக் கல்வியின் முறை, தரம் இவை குறித்தும், இக்கல்வி முறை இடைத்தரக் கல்விக்கு எவ்வளவு தூரம் உபயோககரமாயிருக்கிறது என்பது குறித்தும் விசாரணை நடத்துமாறு குழு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

அரசியல் சட்டத்தின் 45-வது பிரிவுப்படி, மாநிலத்தில் உள்ள 14 - வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கெல்லாம் கட்டாய ஆரம்பக் கல்வி தருவதற்கான வழி வகைகளையும், மற்றும், ஆரம்பக் கல்வி பெறும் நிலையில் குழந்தைகள் பள்ளிகளிலிருந்து வெளியேறிவிடாமல் பார்த்துக் கொள்ளுதல் போன்ற பிரச்னைகளுக்குப் பரிகாரம் காணுதல் ஆரம்பக் கல்வி போதிக்கும் ஆசிரியர்களின் அந்தஸ்து, சம்பளம் இவை பற்றியும் ஆராய்ந்து, ஆய்வுக் குழு சர்க்காருக்கு யோசனை தெரிவிக்கும் என்றும் தெரிய வருகிறது.

ஆந்திராவில் - பொதுத் தேர்தல்

பிப்ரவரியில் நடப்பது உறுதி

டாக்டர் கட்ஜு கூறுகிறார்

"ஆந்திர மாநிலத்தில் புதிய தேர்தல்கள் பிப்ரவரி மாத மத்தியில் துவங்கி மார்ச் மாத முதல் வாரத்தில் முடிவுற்றுவிடும்," என்பதை மீண்டும், ராஜ்ய சபையில், உள்நாட்டமைச்சர் டாக்டர் கட்ஜு உறுதிப்படுத்தியுள்ளார்.

அதன் பின், ஏப்ரலில், மந்திரி சபை அமைந்துவிடும் என்றும் கூறினார்.

தேர்தல்கள் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுவிட்டன என்று சில பத்திரிகைகளில் வெளியான செய்திகளைச் சுட்டிக்காட்டி, தோழர் பிரசாதராவ் என்பவர் எழுப்பிய கேள்வியின் போதே மந்திரி மேற்கண்ட விவரங்களை உறுதிப்படுத்தினார்.

"'இப்போதைக்கு' சர்க்கார் இப்படித்தான் உத்தேசித்துள்ளது," என்று அமைச்சர் கூறியுள்ள பதிலில், 'இப்போதைக்கு' என்ற சொல்லுக்குப் பொருளை வரையறுத்துக் கூறுமாறு கேட்க, மந்திரியார், 'பத்திரிகை ஹேஷ்யங்களை என்றும் அங்கத்தினர் நம்பத் தேவையில்லை,' என்று கூறினாராம்.

ஆசிய - ஆப்பிரிக்க மாநாடு

ஜகார்தா, டிச. 6—

அடுத்த ஆண்டு பிப்ரவரி, அல்லது மார்ச் மாதத்தில் இந்தோனேஷியாவில் நடைபெறவிருக்கும் ஆசிய—ஆப்பிரிக்க மாநாட்டிற்கு யார் யாரை அழைப்பது என்ற பட்டியல் தயாரிக்கவும், மாநாட்டில் விவாதிக்க வேண்டிய விஷயங்கள் குறித்து முடிவு செய்யவும், வருகிற டிசம்பர் 28-ந் தேதியன்று, இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பர்மா, இந்தோனேஷியா ஆகிய நாட்டுப் பிரதமர்கள் இங்கு கூடுவர் என்று தெரிகிறது.

சர்க்கரை பற்றாக்குறை

இந்தியாவில் உற்பத்தியாகும் சர்க்கரை தேவைக்குப் போதுமானதாக இல்லாமையால் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்காக இவ்வாண்டில், 8 32 லட்சம் டன் சர்க்கரை இறக்குமதி செய்ய உத்தேசிக்கப்பட்டிருப்பதாக விவசாய மந்திரி பஞ்சாப் ராவ் தேஷ்முக் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

கடந்த இரண்டாண்டுகளாக, சர்க்கரை உபயோகம் நாட்டில் அதிகரித்துள்ளது என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

சென்னை சட்ட சபையில்..

★

விவசாயிகள் தகராறு

கடந்த 1953-ம் ஆண்டில் சிதம்பரத்தில் ஏற்பட்ட விவசாயிகளின் தகராறு காரணமாக மொத்தம் 99 பேர் கைது செய்யப்பட்டனர் என்றும், அவர்களில் 44 பேர் இரண்டு தினங்களும், 40 பேர் 4 தினங்களும், மீதம் 15 பேர் 15 தினங்களும் சிறையில் இருந்தனர் என்றும் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் மந்திரி சுப்பிரமணியம் கூறினர்.

அபிவிருத்தி

தஞ்சையில் 10 இடங்கள் உட்பட மொத்தம் 20 இடங்களில் தேசீய விஸ்தரிப்புத் திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதென்றும், திட்டத்தை தென்னாற்காடு மாவட்டத்தில் அமுல் செய்வது பரிசீலனையிலிருப்பதாயும் கேள்விக்குப் பதில் அளிக்கையில், மந்திரி பக்தவத்சலம் தெரிவித்திருக்கிறார்.

செயற்கை மழை

செயற்கை மழைக்கு பரீட்சைகளை நடத்துவது சர்க்கார் பரிசீலனையிலிருக்கிறதென்றும், இது குறித்து இறுதி முடிவு இன்னும் எடுக்கவில்லையெனவும், கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் பக்தவத்சலம் தெரிவித்தார்.

பீடித் தொழில்

கடந்த ஆகஸ்டு மாதத்தில் பீடித் தொழிலாளர்களுக்கும் பீடி கம்பெனி நிர்வாகிகளுக்குமிடையில் எழுந்த தகராறுகளைத் தீர்த்து வைக்க சட்ட நிலையில் உள்ள கஷ்டத்தை நிவர்த்திக்கவேண்டுமென்று சென்னை தொழில் மன்றம் குறிப்பிட்டிருந்ததையொட்டி, அம்மாதிரி செய்வது குறித்து சர்க்கார் பரிசீலனை செய்துவருவதாக, கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் மந்திரி பக்தவத்சலம் தெரிவித்திருக்கிறார்.

ஹோமியோபதி வைத்திய முறை

சென்னை மாநிலத்தில் ஹோமியோபதி வைத்திய முறையை, வைத்திய வசதியற்ற சிறிய கிராமங்களில் புகுத்துவது பற்றியும், இன்னும் ஹோமியோபதி வைத்திய முறை குறித்தும் விவாதிக்க சபையில் அரை மணி நேரம் ஒதுக்க சபைத் தலைவர் ஒப்புதல் அளித்திருக்கிறார்.

உண்ணாவிரதம்!

கண்ணனூர் சிறையிலிருந்த 5-தண்டனை கைதிகள், தங்களை வேறு சிறைக்கு மாற்ற சென்னை சிறை இலாக்கா அதிகாரி மறுத்துவிட்டதால், உண்ணாவிரதமிருந்தது உண்மைதான் என்று மந்திரி ஒப்புதல் தந்தார்.

கடன் தருவார்கள்

சென்னை பால் விநியோக சங்கத்திற்கு 1952-ல் ரூ. 3,49,540 கடனாக சர்க்கார் தந்தது என்றும், இவகுள்ள ஊழியர்கள் யார்மீதும் பாலில் கலப்படம் செய்ததாக வழக்குத் தொடரப்படவில்லையென்றும், எதிர்க் கட்சித் தலைவரின் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் சுகாதார மந்திரி ஏ. பி ஷெட்டி அறிவித்தார்.

மதுவிலக்கு

சென்னை மாநிலத்தில் மதுவிலக்கு சட்ட அமுல் குறித்த அறிக்கையை அனுப்பும்படி சென்னை சர்க்காரை திட்டக் குழு கேட்டிருக்கிறது என்று கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், மதுவிலக்கு மந்திரி பி. பரமேஸ்வரன் தெரிவித்தார்.

1954 செப்டம்பர் மாதத்தில், இந்தியாவின் ஏற்றுமதிகளின் மூலம் கிடைத்த வருமானம் 50 - கோடி ரூபாயாகும்; 1954 ஜூன் மாதத்திலிருந்து அதுவகையில் கிடைத்துவரும் சராசரி மாத வருமானம் 46 கோடி ரூபாயாகும்.

கழகச் செய்திகள்

பட்டாபிராம் தி. மு. கழகம்

27—10—54ல், இவ்வூர் தி. மு. கழகத்தின் முதலாண்டு விழாப் பொதுக்கூட்டம் தோழர் ஆஜா மொஹமது தலைமையில் நடைபெற்றபோது 300 ஏழைகளுக்கு அன்னம் அளிக்கப்பட்டது.

* * *

10—11—54ல் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், வரவு - செலவு கணக்குகள் ஒப்புக்கொள்ளப்பட்டு, பல தீர்மானங்களும் நிறைவேற்றிய பின், புதிய கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:- செயலாளர்: ஆஜா மொஹமது, துணைச் செயலாளர்: எம். பெருமாள்சாமி; பொருளாளர்: கே. எம். பாபு; மாவட்டப் பிரதிநிதிகள்: டி. எஸ். முகமதலி, பி. டானியல், செயற்குழு உறுப்பினர்கள்: ஆர். நேசன், எஸ். பி. சேது, முருகேசன், கே. டி. பாலு, அருணாசலம், தா. து. சண்முகம், டி. எஸ். முகமதலி, பி. டானியேல் ஜே எஸ். மணி, காப்ரேல், இராமசாமி.

அருப்புக்கோட்டை தி. மு. கழகம்

24—11—54 இரவு 10 மணிக்கு கழக அலுவலகத்தில், தோழர் திரு. சு. நடராசன் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் பொங்கல் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதெனவும், கழகத் தோழர்கள் சிலர் மீது போலீசார் தொடர்ந்துள்ள வழக்குகளின் முடிவை எதிர்த்து அப்பீல் செய்துகொள்வதெனவும், தேசீய நாடக விழாவில், தமிழ் மக்களின் அபிமானம் பெற்ற கலைஞர்களோ, தமிழ்ப் பண்பின் உயர்வினை எடுத்துக்காட்டும் நாடகங்களோ சேர்க்கப்படாதது குறித்துக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சென்னை-அந்லை தி. மு. க.

28—11—54 மாலை 5 மணியளவில் கலியாண்மேஸ்திரி தோட்டத்தில், தோழர் இராச இரத்தினம் தலைமையில் நடைபெற்ற கழகப் பொது உறுப்பினர் கூட்டத்தில் தேசிகவிநாயகம், சாஞ்சி கல்யாண சுந்தரம் அவர்களது மகன் அருணாசலம், தோழர் என். மாரிமுத்து, தோழர் சிவராசனின் செல்வி மல்லிகா, தோழர் அ. குப்புசாமியின் மகள் ஆகியோரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், கழக வரவு-செலவு கணக்குகள் ஒப்புக்கொள்ளப்பட்டும், பொதுக் குழுவிலிருந்து விலகிய—விலக்கப்பட்ட தோழர்களுக்குப் பதிலாகத் தோழர்கள் டபிள்யு. எம். இராமச்சந்திரன், டி. வி. அரசு, இராசாபாதர், மு. கலியாணசுந்தரம், எஸ் எம். சின்னசாமி, நாராயணன், எம். ஆர். தங்கவேலு, பி. எஸ் பெருமாள், அன்பரசன், சிங்காரம் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், தோழர் சு. பாலன் மாவட்டப் பிரதிநிதியாகவும், தோழர் எஸ் வி. இராசசேகரன் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பா. நா. புதூர் (கோவை மாவட்டம்) தி. மு. கழகம்

28—11—54 பகல் 11 மணியளவில், கழக இல்லத்தில், தோழர் மதிவாணன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், பிரதி வாரமும் சொற்பயிற்சிக் கூட்டங்கள் நடத்துவதெனவும், பொங்கல் விழா பொதுக்கூட்டத்தின்போது சீர்திருத்த நாடகம் ஒன்று நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டு, தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

பம்பாய் மாவட்ட தி. மு. கழகம்

23—11—54 மாலை 6½ மணிக்கு தாராவி குடியரசு நிலையத்தில், தோழர் சு. வள்ளிநாயகம் தலைமையில் நடைபெற்ற மாவட்ட கழகக் கூட்டத்தில், பொங்கல் விழாவை மாவட்டக் குழுவின் சார்பில், தாராவியில் 16—1—55ல் நடத்துவதெனவும், அதனையொட்டி ஓர் கதம்ப நிகழ்ச்சி நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

சென்னை திருவல்லிக்கேணி தி. மு. கழக (கிளை)

28—11—54 மாலை 6 மணிக்கு, தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகப் பொது உறுப்பினர் கூட்டத்தில் கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: நீல. நாராயணன்; துணைச்செயலாளர்: மு. வரதராசன்; பொருளாளர்: ஜி. பெருமாள்; மாவட்ட உறுப்பினர்கள்: பூ. அரங்கசாமி, இளம்பரிதி; மற்றும் 16 செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கழகத்தில் புதிய உறுப்பினராகச் சேர்ந்த தோழர் வி. இராசமாணிக்கம் அவர்கள், தாம் அணிந்திருந்த் பழமையின் சின்னமான பூநூலை அறுத்தெறிந்ததை தலைவர் தோழர் கண்ணபிரான் பாராட்டிப் பேசினர்.

திண்டுக்கல்லில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

28—11—54 மாலை 6½ மணியளவில் வ. உ. சி. திடலில், தோழர் ம. சுந்தரராசு தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக் கூட்டத்தில், தோழர்கள் பி. சமதர்மம், திருச்சி பராங்குசம் ஆகியோர் பேசியபின், தோழர் ஈ. வெ. கி சம்பத் அரியதோர் சொற்பொழிவாற்றினர்.

உலக நாடுகளிலுள்ள ஜனநாயக அரசாங்கங்களுடையவும், 'நமது 'ஜனநாயக' அரசாங்கத்தினுடைய நடவடிக்கைகளையும் எடுத்துக் காட்டி, 'ஜனநாயகத்'தின் பேரால், இன்றைய நமது அரசாங்கத்தின் எதேச்சாதிகாரப் போக்கையும் சரித்திர ஆதாரபூர்வமான ஆதாரங்களுடன் விளக்கியும், காங்கிரஸ், கம்யூனிஸ்ட், சோஷலிஸ்ட், பி.-சோ. போன்ற கட்சிகளின் 'ஒன்றுபட்ட இந்தியா' என்ற கூற்றுக்கும், 'திராவிட நாடு திராவிடருக்கே' என்பதற்கும் உள்ள உண்மை வேற்றுமைகளை உவமானங்களுடன் விளக்கிப் பேசினர்.

ஓமலூர் தி. மு. கழகம்

29—11—54 இரவு 7 மணிக்கு, இவ்வூர் தி. மு. கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம், சனி சந்தை மைதானத்தில்; எம். பி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் ஈ. ஆர். கிருஷ்ணன், சிற்றுளி சுப்பிரமணியம் ஆகியோர் தி. மு. கழகத்தின் கொள்கைகள், திட்டங்கள் பற்றியும், திராவிட நாடு பிரிய வேண்டியதின் அவசியம் குறித்தும் சொற்பொழிவாற்றினர்.

தவுட்டுப்பாளையம் தி.மு.க.

29—11—54ல், தோழர் டி. பி. மூர்த்தி தலைமையில் நடைபெற்ற இவ்வூர் கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், 15-12-54ல் கழகச்சார்பில் ஒருபொதுக்கூட்டம் நடத்துவதெனவும்; அதற்காகப் பொதுமக்களிடம் நன்கொடை வசூலிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

புதுவை தி. மு. கழகம்

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

30—11—54-ல் நடைபெற்ற புதுவைத் தி. மு கழகச் செயற்குழு கூட்டத்தில், கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

"புதுவை அரசாங்கச் சின்னம் அமைக்கப்பட்டிருப்பதாகவும், அச்சின்னத்தின்கீழ் 'சத்ய மேவ ஜயதே' என்னும் வாக்கியம் பொறிக்கப்பட்டிருக்கும் என்றும் புதுவைக் கமிஷனர் அறிவித்துள்ளதாக வந்த பத்திரிகைச் செய்தி கண்டு வருந்துவதோடு, தமிழர்கள் வாழும் பகுதியில், எல்லோராலும் பொருள் விளங்கிக்கொள்ள முடியாத அவ்வட மொழிச் சொற்றொடரை நீக்கி, அக்கருத்தமைந்த 'உண்மையே வெற்றி தரும்' என்னும் தமிழ் மொழிச் சொற்றொடரை அமைக்குமாறு புதுவைக் கமிஷனரைக் கேட்டுக்கொள்கிறது.

"சின்னம் அமைக்க, அன்று கூடிய பல்வேறு அரசியல் கட்சியினரும் தமிழராயிருந்தும், தமிழில் அச்சொற்றொடரை அமைக்க முயலாமல், சமஸ்கிருதச் சொற்றொடரை அமைக்க ஒப்பியதற்கு வருத்தம் தெரிவித்துக்கொள்ளுகிறது.

"சின்னத்தின் வடமொழிச் சொற்றொடரை மாற்றியமைக்காமல் அப்படியே வெளியிடுவார்களேயானுல், புதுவை மாவட்டத்திலுள்ள தமிழைப் போற்றும் கழகங்கள்—சங்கங்கள் யாவும், அதற்காகக் கிளர்ச்சி செய்ய வேண்டுமாறு வேண்டிக்கொள்கிறது."

இடையகோட்டை தி. மு. கழகம்

2—12—54-ல் தோழர் எம். எ. அப்துல்ஹசன் தலைமையில் நடைபெற்ற செயற் குழு கூட்டத்தில், தோழர்கள் மு. பன்னீர் செல்வன், மு. கரிகாலன், கே. டி. பதி ஆகியோர் டிசம்பர் 26-ல் இங்கு நடைபெறும் ஆண்டு விழாவிற்கான ஏற்பாடுகள் பற்றியும், நாட்டுப் பிரிவினை குறித்தும் விளக்கம் தந்தனர். பின்னர், 26—12—54 காலையில், ஏழைகளுக்குக் கஞ்சி வழங்குவதென்றும், ஏழைச் சிறுவர்களுக்கு எண்ணெய், சீயக்காய் முதலியன தந்து குளிக்கச் செய்து புத்தாடை வழங்குவதென்றும், தோழர் ப. குப்புசாமி தலைமையில் ஒரு தொண்டர் படையை நிறுவுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. பின்னர், தோழர் பகுத்தறிவாளன் அவர்கள் இல்லத்தில், செயலாளர் தோழர் பதியால் கழகக் கொடி ஒன்று பறக்கவிடப்பட்டது.

மாயூரத்தில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

5—12—54 மாலை, மாயூரம் பொருட்காட்சி கலையரங்கில், தோழர் து. காசிநாதன் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர் எ. கோவிந்தசாமி, எம். எல். எ., அவர்கள், இன்றைய அரசியல் நிலை குறித்தும், சட்டசபை விவாதங்கள் பற்றியும் விரிவுரையாற்றினர்.

பின்னர், மதுரையில் குழப்பம் விளைவித்தவர்களின் வெறிச் செயலைக் கண்டித்தும், அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு அரசியலாரை கோரியும், மாயூரம் பூங்காவில் கூட்டம் நடைபெறுமிடத்தில் மின்சார வசதி செய்துதர நகராட்சி மன்றத்தைக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

குளித்தலையில் தி. மு. க. பொதுக் கூட்டம்

5—12—54 மாலை 6 மணிக்கு இவ்வூர் வ. உ. சி. சதுக்கத்தில் தோழர் க. முத்து தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் இரா. சு. தங்கப்பழம், சீ. மு. வளர்மதி, தி. வீ. முத்துகிருஷ்ணன் ஆகியோர் 'அரசியலில் தி. மு. க.' என்பது பற்றிச் சொற்பொழிவாற்றினர். பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அரிசிபாளையத்தில் தி. மு. கழக பொதுக்கூட்டம்

5-12-54 மாலை 6-30 மணிக்கு தோழர் பி. எ. வீரபத்ரையா தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர்கள் ஈ. ஆர். கிருஷ்ணன், அ. சுப்பிரமணியம் ஆகியோர் பேசியதும், தோழர் டி. கே. தாமரைச் செல்வன் தி. மு. கழகக் கொள்கை இலட்சியங்கள் பற்றியும், நமக்கு ஏற்படுகிற எதிர்ப்புகள் எம்மாதிரியானவை என்பது பற்றியும் சொற்பொழிவாற்றிய பின், தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சமுதாயத்தைப் பற்றியும், இராதா அவர்களின் 'இராமாயணத்'திற்கு ஏற்பட்ட எதிர்ப்புகளுக்கு காரணம்பற்றியும், இறுதியில் தி. மு. கழகம் கொண்டுள்ள அரசியல், பொருளாதாரக் கொள்கைகளைக் குறிப்பிட்டும் அரியதோர் சொற்பொழிவாற்றினர்.

திருச்சி 27—வது வட்ட தி. மு. கழக (கிளை)

5—12—54 இரவு 10 மணியளவில், கழகக் கட்டிடத்தில் தோழர் என். அருணாசலம் தலைமையில் நடைபெற்ற சொற்பயிற்சிக் கூட்டத்தில், தோழர்கள் எஸ். முகமது அலி, என். முருகேசன், எம். கே. எம். உசேன், ஐ. எம். ஷெரீப், ஆகியோர் பேசினர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

நாகபட்டினம் தி.மு. கழகம்

5—12—54 மாலை 5—30 - மணிக்கு, கழகக் கட்டிடத்தில், தோழர் விசயராகவன் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், தோழர் அன்புமுகம் விலகுதல் கடிதத்தை ஏற்றுக் கொண்டும், அவருக்குப் பதிலாகத் தோழர் கே. கே. சித்திரவேலு வட்டக் குழுச் செயலாளராகவும், தோழர்கள் சந்தானம் துணைச் செயலாளராகவும், சபாபதி பொருளாளராகவும், விசயராகவன் மாவட்டப் பிரதிநிதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர், பொங்கல் திருநாளையொட்டி, நெசவாளர் துயர் துடைக்கும் பணியில் இவ்வாண்டும் கைத்தறி ஆடைகளை விற்பனை செய்ய கேட்டுக்கொண்டும், தஞ்சை மாவட்டத்தில் அமைக்கப்படவிருக்கும் மருத்துவக் கல்லூரியை, தஞ்சையிலேயே அமைக்குமாறு அரசியலாரைக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இலக்கடம்பூர் தி. மு. க.

6—12—54 மாலை 6½ மணிக்கு, அண்ணு படிப்பகத்தில், தோழர் கோவிந்தசாமி தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழு கூட்டத்தில், தோழர் வேலாயுதம் அவர்கள் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், பொங்கல் விழாவை சிறப்புற நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டதுடன், வரவு-செலவு கணக்குகள் சரிபார்த்து ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீர்முள்ளிக்கோட்டை தி. மு. கழகம்

6—12—54ல் நடைபெற்ற பொதுக் குழுக் கூட்டத்தில் முன்னிருந்தபடியே, தலைவர்: என். கே. வெங்கடாசலம்; துணைத் தலைவர்: என். டி. வீரய்யன்; பொருளாளர்: என். எம். தங்கவேல்; மாவட்டப் பிரதிநிதி: எ. அங்கமுத்து—ஆகியோர் இருப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

ஒத்திவைப்பு

மதுரை நகரில் தற்பொழுது நிலவி வரும் 144 தடை உத்தரவின் காரணமாக, 5—12—54ல் நிகழவிருந்த திருக்குறள் மாநாடு ஒத்திவைக்கப் பட்டிருக்கிறது, எனப் பொறுப்பாளர் அறிவிக்கிறார்.

கர்நாடக தி. மு. கழக முதலாவது மாநாடு

"பெங்களூரில் டிசம்பர் 18, 19 ஆகிய இரு தேதிகளிலும் நடைபெற விருக்கும் கர்நாடக தி. மு. கழக மாநாட்டின் டிக்கட்டு புத்தகங்கள் பெற்றுச் சென்றுள்ள கிளைக் கழகத் தோழர்கள், அனுதாபிகள் இதுவரையில் விற்பனையாகியுள்ள டிக்கட்டுப் பணத்தை 12—12—54-க்குள் மாநாட்டுப் பொருளாளர் அவர்கள்வசம் சேர்ப்பித்துவிட வேண்டுகிறேன். 15—12—54 வரையில் விற்கப்பட்ட டிக்கெட்டுகள் போக மீதி இருக்கும் டிக்கட்டுகளையும், கணக்கும் சேர்த்துவிடவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்," என்று வரவேற்புக் குழுத் தலைவர் எஸ். ஜே. உசேன் அறிவிக்கிறார்.

சி. பி. சிற்றரசு உடல் நிலை

தோழர் சிற்றரசு, பெங்களூரில் முதல் முறையாக (15 நாட்கள்) மருத்துவம் பெற்ற பிறகு, மீண்டும் சனிக்கிழமை பரிசோதிக்கப்பட்டு இதுவரை உட்கொண்டு வந்த மருந்துகளோடு மேலும் இரண்டுவித மருந்துகளைச் சேர்த்துச் சாப்பிடவும், அதன் பிறகு இருபது நாட்களில் பத்து ஊசிகளைப் போட்டுக் கொள்ளவும் பணிக்கப்பட்டிருக்கிறார்.

ஆகவே, மேற்கண்ட எல்லாவித மருத்துவங்களையும் முடித்துக் கொண்டு ஜனவரி முதல் வாரத்தில் ஊர் திரும்புவார்.

அவர் உடல் நலத்தை விசாரித்துப் பல தோழர்கள் எழுதும் கடிதங்களுக்கு தனித் தனியாகப் பதில் எழுத முடியாத நிலையில் அனைவருக்குமே மேற்கண்ட செய்தியை அன்புடன் அறிவிக்கிறார்.

முத்தமிழ் மன்ற பொதுக்கூட்டம்

சென்னை முத்தியாலுப்பேட்டை முத்தமிழ் மன்றச் சார்பில் 5—12—54 மாலை 6-30 மணிக்கு சாலைவிநாயகர் கோவில்-தெருவில் ஓர் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

திரு. டி. சண்முகம் எம். எல். ஏ. தலைமை தாங்கினுர். இரா. சண்முகம் தமிழ்ப்பண் இசைத்தார்.

அடுத்து, தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் சொற்பொழிவாற்றினுர். தொடர்ந்து தோழர்கள் டி. வி. நாராயணசாமி, எல். எஸ். இராசேந்திரன் ஆகியோர் பேசியதும் தோழர் மு. கருணாநிதி அவர்கள், 'முத்தமிழ்' குறித்து நீண்டதோர் உரை நிகழ்த்தினுர்.

திருப்பத்தூர் வர்த்தகர் சங்கப் பொதுக் கூட்டம்

28—11—54 காலை 9-30 மணியளவில் மீனாட்சி டாக்கீசில், திரு. ஈ. எல். இராகவ (முதலியார்) எம். எல் ஏ., தலைமையில் நடைபெற்ற மேற்படி சங்கப் பொதுக் கூட்டத்தில், பலகட்ட விற்பனை வரியை எதிர்த்தும், ஏழை வியாபாரிகளின் கஷ்டங்கள் நீக்குவதற்கு அரசாங்கம் ஆவன செய்யவேண்டுமென வற்புறுத்தியும் தோழர்கள் டி. கணபதி, வே. ச. விசுவநாதம், கேசவலால் காளிதாஸ் சேத் ஆகியோர் பேசினர். பின்னர், சென்னை மாநில சங்கத்திற்கு திருப்பத்தூர் சங்கப் பிரதிநிதியாகத் தோழர் ஆர். ஜி. சண்முகம் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், கும்பகோணம் மாநாட்டுக்கு 12 பிரதிநிதிகள் அனுப்பப்படவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

1954—55-ம் ஆண்டில் (1954 செப்டம்பர் மாதம் வரை) சப்ளை-விற்பனை டைரெக்டர்—ஜெனரல் வாங்கியுள்ள இயந்திர சாதனங்களின் மொத்த பெறுமானம் 4.88 கோடி ரூபாயாகும். 1953—54ம் ஆண்டில் மொத்தம் 7·31 கோடி ரூபாய்க்கு இயந்திர சாதனங்கள் வாங்கப்பட்டன.

சென்னை சட்ட சபையில்....

★

'மேலுக்கே கல்யாணம் கழுத்தே சுகமாயிரு!'

"காங்கிரஸ் நிலச் சீர்திருத்தக் குழுவின் அறிக்கையை சர்க்கார் எதிர்பார்க்கிறது; அது கிடைத்த பின்னர் தேவையான நடவடிக்கை களை சர்க்கார் மேற்கொள்ளும்,' என்றும், 'எப்போது நிலச் சீர் திருத்தம் மேற்கொள்ளப்படும்,' என்ற கேள்விக்குப் பதிலளிக்கை யில் '1955-ம் வருடம் தான் நிலச் சீர்திருத்தத்திற்கு சாதகமான வருடம் என சர்க்கார் கருதுவதாக' வும், மந்திரி மாணிக்கவேலர் சட்ட சபையில் தெரிவித்திருக்கிறார்.

'நில உடமைக்கு வரம்பு விதிப்பது பற்றி சர்க்கார் என்ன முடிவு செய்துள்ளது?' என்று கேட்கப் பட்டபோது, 'அதுபற்றி இன்னமும் சர்க்கார் எவ்வித முடிவையும் மேற்கொள்ள வில்லை' யென்றும் மந்திரியார் தெரிவித்துள்ளார்.

ஐயோ! போகட்டும்!

ஆரம்பப்பள்ளிகள், இடை நிலைக் கல்வி நிலையங்கள், கல்லூரிகள் இவற்றில் சங்கீதத்தை கட்டாய பாடமாக்க வேண்டும் என்றும், இதற்குத் தகுதியுள்ள ஆசிரியர்களை நியமனம் செய்ய வேண்டும் என்றும், மலபார் சங்கீத ஆசிரியர் சங்கச் செயலாளரிடமிருந்து சர்க்காருக்கு மனு ஒன்று வந்துள்ளது என்றும் அதுபற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து வருவதாயும் கல்வி மந்திரி சுப்ரமணியம் கூறினார். 'சர்க்காரின் முடிவு சங்கீதத்திற்கு சாதகமாயிருக்குமா?' எனக் கேட்டதற்கு, 'எனக்கு எப்பொழுதும் சங்கீதம் என்றால் பிடிக்கும்' என்றும் அவர் கூறினாராம்.

பரிசீலித்துக்கொண்டே இருக்கிறார்களாம்!

கடலூர் நகரசபை முழுவதற்குமான விரிவான சாக்கடை திட்டம் பற்றி இன்னும் பரிசீலனை நடந்து கொண்டேயிருப்பதாகவும், ஆகவே திட்டத்திற்கான செலவு பற்றி இப்போது கூறமுடியாதெனவும் மந்திரி ஷெட்டி,கேள்வி ஒன்றுக்கு பதிலளித்துள்ளார்.

பதவி உயர்வுக்கு......

போலீஸ் இலாக்காவில் பதவி உயர்வுக்கு, பன்னெடுங்கால சேவையை மட்டுமே யோக்யதாம்சமாகாது என்று மந்திரி சுப்ரமணியம் தெரிவித்தார். 1952-ம் ஆண்டு முதல், 'சப்-இன்ஸ்பெக்டர்' பதவிக்கு நேரிடையாக ஆட்கள் தேர்ந்தெடுப்பது நிறுத்தப்பட்டு விட்டதென்றும், அவர் கூறியிருக்கிறார்.

'போலீஸ் அதிகாரிகளின் மாற்றம் அல்லது உத்தியோக உயர்வு குறித்து மாவட்ட போலீஸ் அதிகாரி அல்லது வட்டார போலீஸ் அதிகாரி இவர்களுக்கு, சட்டசபை அங்கத்தினர்கள் மனுச் செய்து கொள்ளலாமா?' என்று கேட்கப் பட்டபோது, இதுபற்றி கவனிப்பதாகவும், இத்தகு விஷயங்களில் அங்கத்தினர்கள் மந்திரிகளைச் சந்தித்துப் பேசுவது நல்லது என்றும் அதுவே சரியான வழியில் நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவக் கூடியது என்றும் திரு. சுப்ரமணியம் கூறியிருக்கிறார்.

ஒதுக்கப்படவில்லை

கம்பளி, ஜமக்காளம் போன்றவைகள் செய்வதற்கு கைத்தறி செஸ் நிதியிலிருந்து இதுவரை எதுவும் ஒதுக்கப்படவில்லை; இது பற்றி மத்திய சர்க்காருடன் கடிதப் போக்குவரத்து நடந்துவருகிறது என்று மந்திரி பக்தவத்சலம் தெரிவித்தார்.

தவணை தருகிறார்கள்!

தேசிய விஸ்தரிப்புத் திட்ட பிரதேசங்களில், தரப்படும் குறுகிய கால கடன்களைத் திருப்பித் தர 5 வருட கால தவணை தரப்படுவதாக ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் விவசாய மந்திரி தெரிவித்தார்.

திட்டமில்லை

திருச்சி மாவட்டத்தில் குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கான திட்டமேதும் கைவசமில்லை என்று பக்தவத்சலம் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் தெரிவித்துள்ளார்.

உஷார் விடுதி

"சென்னை உஷார்விடுதி, பெண்கள் சதனம் இவற்றின் நிர்வாகத்திற்காக 1953—54-ல் 1,70,000 ரூபாய் சர்க்கார் செலவு செய்துள்ளது; சென்னை உஷார் விடுதியில் 238 பேர் உள்ளனர்; உஷார் விடுதியிலிருந்து அவர்கள் செய்யும் கைத் தொழில்கள் மூலம் ஆண்டு வருமானம் ரூ. 4,200 கிடைத்தது," என்று நிதிமந்திரி தெரிவித்தார்.

'காக்காய்' பிடிக்கிறார்கள்!

"போலீஸ் இலாக்காவில் 'காக்காய்' பிடிப்பது அதிகரித்து விட்டது," என்று ஒரு அங்கத்தினர் கூறினார். சபையின் அமைதியைக் குலைத்தது சிரிப்பொலி. உடனே மந்திரி சுப்ரமணியம், "'காக்காய்' பிடிப்பது எங்குதான் இல்லை' சட்டசபையில் கூட இருக்கலாமென நினைக்கிறேன்," என்று கூறி மீண்டும் சபையைச் சிரிப்பிலாழ்த்தினாராம்.

கொய்னா உற்பத்தி

வால்பாறையில் கடந்த 1943-ல் ரூ. 28 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள தொழிற்சாலையில் இன்னும் மூன்று அல்லது நான்கு மாதங்களில் கொய்னா உற்பத்தி துவங்கும்; முதலில் இதை வேறெதற்காயினும் உபயோகித்துக் கொள்ளலாமா வென்று யோசிக்கப்பட்டது. ஆனால் பின்னர் கொய்னாஉற்பத்தியைமட்டுமே மேற்கொள்ளுவது என்று முடிவு செய்யப்பட்டது என்று மந்திரி பக்தவத்சலம் தெரிவித்தார்.

அனுமதிக்கவில்லை

சென்னை நகரசபை 1954-ல் வீட்டு வரி உயர்த்துவதை சர்க்கார் அனுமதித்ததாவென்று கேட்கப் பட்டதற்கு, 'கனம்' இராமசாமி இல்லை என்று பதிலளித்திருக்கிறார்.

வேலை இழந்த ஊழியர்கள்

உணவு தானியக் கட்டுப்பாடுகள் ஒழிக்கப்பட்டதின் விளைவாக, அந்த இலாகா ஊழியர்களில், 1954 செப். முடிவுவரை 114 பேர்கள் அவர்கள் எந்த இலாக்காவிலிருந்து வந்தனரோ அந்த இலாக்காவுக்கே திருப்பி அனுப்பப்பட்டனர்; 215 பேர் வேலையிழந்தனர் என்று மந்திரி பக்தவத்சலம் தெரிவித்திருக்கிறார்.

சென்னை மாணவர் மன்ற அறிக்கை

சென்னை மாணவர் மன்றத்தார் 12—12—54 அன்று காலையில் வாலாஜாபாத்துக்கு உல்லாசப் பிரயாணம் செய்யவிருக்கின்றனர் அன்று மாலையே மீண்டும் திரும்பி விடுவர். அவர்களோடு சேர்ந்து செல்ல விரும்புவோர் (குடும்பத்துடனும்) 'மாணவர் மன்றம்' 17, இரத்தின முதலி தெரு, சென்னை, எனும் முகவரிக்கு எழுதி அறிவித்துக் கொள்ளலாம். போக வர ஏற்படும் பிரயாணச் செலவைத் தவிர, ஏனைய உணவு முதலிய பிற செலவுகளையெல்லாம் பெரியார் வா. தி. மாசிலாமணி அவர்களே ஏற்றுக் கொள்ளுவதாக வாக்களித்துள்ளாரென அறிவிக்கப்படுகிறது.

1954 ஆகஸ்ட் மாதத்தில், இந்தியாவிலுள்ள பொது உபயோக மின்சார உற்பத்தி நிலையங்களில் மொத்தம் 63.28 கோடி கிலோ வாட் மின்சார சக்தி உற்பத்தி செய்யப்பட்டது. 1953 ஆகஸ்டில் உற்பத்தியான மின்சார சக்தியின் மொத்த அளவு 57.82 கோடி கிலோவாட் ஆகும்.

அறிவிப்பு

"11-12-54 அன்று கோகலே ஹாலில் திரு. கண்ணதாசன் அவர்கள் "இலக்கியம் கண்ட திராவிட நாகரீகம்" என்ற தலைப்பில் காலட்சேபம் செய்வதாய் இருந்தது. பொதுச் செயலாளர் அண்ணா அவர்களுடன் கலந்துகொண்டு சில காரியங்கள் செய்ய வேண்டியிருப்பதால் காலட்சேபம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. தேதியும், இடமும் விரைவில் அறிவிக்கப்படும்."

என்று, சைதாப்பேட்டை தி. மு. கழகச் செயலாளர் பே. செங்குட்டுவன் அறிவிக்கிறார்.

கழகக் கூட்டங்கள்

★

பம்பாய்

தி. மு. கழகம், சயன் முதல் ஆண்டு நிறைவு விழா

இராமர் கோயில் சமவெளியில்

10—12—54 மாலை 6 மணிக்கு

தலைவர்: எஸ். இராசன்

வரவேற்பாளர்: பி. கே. இளமைப்பித்தன்

கொடியேற்றுபவர்: சி. த. மு. இர. ஆரியசங்காரன்

பேசுபவர்: இரா. சு. தங்கப்பழம்

* * *

11—12—54 மாலை 6 மணிக்கு

தலைவர்: ஏ. என். இராமசுவாமி

பேசுபவர்: இரா. சு. தங்கப்பழம்

தோழர்கள் சண்முகராசன், கோதைராசன், பி. கண்ணன் அளிக்கும் 'கடவுள் கண்ட கழகம்' கலை நிகழ்ச்சி நடைபெறும்.

★

பம்பாய்

காந்நகர்லி போய்சேர் தி. மு. கழக முதலாவது ஆண்டு விழா

கிறித்துவ திடலில்

12-12-54 மாலை 6-15 மணிக்கு

தலைவர்: து. சே. அருணாசலம்

வரவேற்பாளர்: கே. ஆர். பொன்னுசாமி

கொடியேற்றுபவர்: சு. வள்ளிநாயகம்

பேசுபவர்: இரா. சு. தங்கப்பழம்

★

செங்காட்டுப்பட்டி

மாரியம்மன் கோவில் மைதானத்தில்

11—12—54 மாலை 6 மணிக்கு

பேசுவோர்: ஈ. வெ. கி. சம்பத், அன்பில் தர்மலிங்கம்

'கடுங்காவல்'—நாடகம்

11-12-54 மாலை 6.30 மணிக்கு, சென்னை, சௌந்தர்ய மஹாலில், தமிழ்க் கலா நாடக மன்றத்தார் 'கடுங்காவல்' எனும் நாடகம் நடைபெறும்.

அரிய சைக்கிள் சாதனை

சேலம், அம்மாப்பேட்டையைச் சேர்ந்த கே. ராமு என்பவர், சேலம் மாவட்ட முனிசிபல் எல்லையிலிருந்து, 4—12—54 காலை 6-30 மணிக்கு, சைக்கிள் கைப்பிடியைப் பிடிக்காமல், சைக்கிளை மார்புமேல், இரண்டு கையையும் தொங்கவிட்டுக்கொண்டு; திருச்சி மாவட்ட முனிசிபல் எல்லைக்கு, பகல் 12-மணிக்கு வந்து சேர்ந்தார். அவர் பிரயாணம் செய்த மொத்த தூரம் 30 மைல் இவ்வளவு தூரத்தையும் 5½ மணி நேரத்திற்குள் கடந்து வெற்றி பெற்றிருக்கிறார். (ந-நி)

அந்நியப் பாதிரிகள்!

இந்தியத் துணைக் கண்டத்தின் பல்வேறு பாகங்களிலும், 6,887 அந்நியப் பாதிரிகள் இருப்பதாக மக்கள் சபைக்குத் தகவல் தரப்பட்டுள்ளது.

'திராவிட நாடு'

பொங்கல் மலர்

★

வண்ணமும்- சுவையும்-
மணமும் பயனும்

நிரம்ப வேண்டும் என்று தோழர்கள் கட்டளை பிறப்பித்துள்ளனர்!

தோழர்கள் மகிழத்தக்கதாக மலர் இருக்கும் என்பதற்கு இதோ உறுதி!

★

★ உடன் பிறந்தார் இருவர்
★ குமரி சூர்யா
★ பழமும் பலனும்
★ பல்லிளிக்கும் பரப்பிரம்மம்!
★ அறுவடை
★ நங்கை நகைத்தாள்!
★ திருமுகம்

இவை, அண்ணாதுரை அளிக்கும் கருத்தோவியங்கள்

இத்துடன், தமிழகம் பருகி ரசித்த

கம்ப ரசம்

புதிய போஸ்களும்!!

கவிதை - கட்டுரை - கதைகள் - ஓவியம்!

இன்பம் பொங்கிட—இதயம் களித்திட

வெளிவருகிறது

இன்பத் திராவிடத்தின் இணையில்லா எழிலேடு!

விவரம் அறிய இன்றே எழுதுக ★ 'திராவிட நாடு,' காஞ்சிபுரம்.

மே. வங்க சர்க்கார்மீது சேலம் வியாபாரிகள் தொடுத்த வழக்கு

தலைமை உயர்நீதிமன்றத்தில் தள்ளுபடி

புதுடில்லி, டிச. 8—

'மேற்கு வங்க சர்க்கார், சேலம் ஜவ்வரிசி அங்கு விற்கக்கூடாது எனக் கூறி, கடந்த செப் 13-ம் தேதி பிறப்பித்த உத்தரவு செல்லத்தக்கதல்ல,' என்று கூறி, சேலம் ஜவ்வரிசி உற்பத்தியாளர் சங்கம், அரசியல் சட்டம் 32-வது பிரிவின் கீழ், தலைமை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்த மனு வாபஸ் பெறப்படுவதற்கு தலைமை உயர்நீதி மன்றம் அனுமதி அளித்தது. செலவுத் தொகையுடன் மனு தள்ளுபடி செய்யப்பட்டது. சேலம் சங்கத்தாரே மனுவை திரும்பப் பெற்றுக் கொள்ள விரும்பினர்.

'ஜவ்வரிசி வியாபாரத்திற்கு வங்க சர்க்கார் தடை விதித்ததின் மூலம் தொழில் நடத்துவது பற்றிய, அரசியல் சட்டத்தில் 19 (1)—(5)-வது பிரிவு தருகிற அடிப்படை உரிமையை, அது பறிப்பதாக உள்ளது' என்று சேலம் சங்கம் தன் மனுவில் கூறியிருந்தது.

மேற்கு வங்க சர்க்கார் தந்த வாக்குமூலத்தில், பொது சுகாதாரத்தை முன்னிட்டு பிரஸ்தாப 'ஜவ்வரிசி' விற்பனைக்கு தடை விதித்ததாகவும், விற்கப்பட்ட பண்டம், உண்மையில், ஜவ்வரிசி அல்லவென்றும், அது பொதுமக்களின் சுகாதாரத்திற்கு தீமை பயப்பதென்றும் கூறப்பட்டிருந்தது.

நீடிக்கிறது!

1955 பிப்ரவரி 8-ந் தேதியுடன் காலாவதியாகிற சென்னை கடன் ஒத்திவைப்புச் சட்டம், வேறு ஒரு புதிய திட்டத்தை உருவாக்க சர்க்காருக்கு வசதியளிக்கும் பொருட்டு, பிப்ரவரி மாதம் முடிய நீடிக்கப்படலாம் எனத் தெரிகிறது.

தெரியாது!

மலேயா, கோலாலம்புரில் இரு இந்தியர்கள் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக, இந்திய சர்க்காருக்கு எவ்விதத் தகவலும் தெரியாது என்று பிரதமர் நேரு மக்கள் சபையில் அறிவித்திருக்கிறார்.

பாங்கி ஊழியர் வேலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தீர்ப்பை சர்க்கார் திருத்தியமைத்திருப்பதால் 92 சதவிகித ஊழியர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்றும், தங்களுக்கு ஏற்கனவே உள்ள உரிமைகளை இதனால் இழக்குமாறு நேரிட்டது என்றும் கூறப்பட்டது. யுனைட்டட் பாங்க் ஆப் இந்தியா வுக்கு இத்தீர்ப்பிலிருந்து விலக்களித்ததின் மூலம், சுமார் 17,000-ஊழியர்கள் பாதிக்கப்பட்டனர் என்று தெரிகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,